18.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ.8.19 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு தோட்டக்கலை துறை காத்திருப்பு!. புதிய வேளாண் அபிவிருத்தி திட்டம் துவக்கம்




காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில், தோட்டக்கலை துறை சார்பாக, நான்கு வகையான செயல் திட்டங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 8.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்காக, துறை அலுவலர்கள் காத்திருக்கின்றனர். நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கீடு பெற்றவுடன், விவசாயிகளுக்கு தேவையான மானியமும், திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன. தோட்டக்கலை துறை சார்பாக, காய்கனிகள் பயிரிடவும், மலர் செடிகள் பயிரிடவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2,980 ஏக்கரில்...

அந்த வகையில், நடப்பாண்டிற்கான செயல் திட்டங்களுக்கு, விவசாயிகளுக்கு மானியம் வழங்கவும், புதிய திட்டங்களை செயல்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான கருத்துருக்கள், நான்கு மாதங்களுக்கு முன், அனுப்பப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெற தோட்டக்கலை துறையினர் காத்திருக்கின்றனர். முதலாவதாக, தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கம் சார்பாக, பண்ணை அளவிலான நுண்ணீர் பாசனம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு, நடப்பாண்டு, 2,980 ஏக்கர் நிலத்தில், சிறு குறு விவசாயிகள், நுண்ணீர் பாசனம் செய்ய, மானியம் வழங்கவும், திட்டத்தை செயல்படுத்தவும் 7.12 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு

உள்ளது.

இந்த நிதி பெறுவதற்கான அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, முற்றிலும் புதிய திட்டமாக, வேளாண் அபிவிருத்தி திட்டம் எனும், புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளனர்.

இதில் மாங்கன்றை நடுவது முதல், மரமாக வளர்ப்பது வரை, அனைத்துமே, இயற்கை முறையில் இருக்க வேண்டும் என்பதே நோக்கமாகும். இந்த திட்டத்திற்காக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 50 ஏக்கர் நிலத்தில், 50 விவசாயிகள் மூலம், திட்டத்தை செயல் படுத்த வேண்டும்.

இயற்கை முறையில் உரம் போடவும், பூச்சி விரட்டி தயாரிக்கவும், மண்புழு உரம் தயாரிக்கவும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதற்காக 6.9 லட்சம் ரூபாய் கேட்டு, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோல், தேசிய அபிவிருத்தி திட்டத்தில், பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையில், பசுமை குடில் அமைக்க, மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டிற்கு 6 பயனாளிகளுக்கு, 1000 சதுர மீட்டரில், பசுமை குடில் அமைக்க, 46.80 லட்சம் ரூபாய் கேட்கப்பட்டுள்ளது. பசுமை குடில் போல, 25 பயனாளிகளுக்கு நிழல் வலை குடில் அமைக்க, 53.25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என, மாவட்ட தோட்டக்கலை துறையினர் எதிர்பார்த்துகாத்திருக்கின்றனர்.

## 4 வகை திட்டம்

இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்த, மேற்கண்ட திட்டங்களுக்கான நடப்பாண்டிற்கான நிதியை, எதிர்பார்த்து இருக்கின்றனர். இதுகுறித்து, தோட்டக்கலை துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் சாகுபடி முறைக்கும் என, நான்கு வகையான திட்டங்களுக்கு நிதியை எதிர்பார்த்து இருக்கிறோம். இலக்கு நிர்ணயிக்கப்பட்டது மற்றும் கருத்துரு கேட்கப்பட்டது என, அனைத்து வகையான நிதியும் பெற்றவுடன், விவசாயிகளுக்கு தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒட்டு ரக பப்பாளி சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு! கச்சிராயபாளையம் விவசாயிகள் ஆர்வம்




கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் பகுதி விவசாயிகள் ஒட்டு ரக பப்பாளி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருவதால், சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

கள்ளக்குறிச்சி அடுத்த கச்சிராயபாளையம் சுற்றியுள்ள கிராமங்கள் நிறைந்துள்ளதால், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பதியில் கிணற்று பாசனத்தின் மூலம் நெல், கரும்பு, மக்கா சோளம், வாழை, பருத்தி போன்ற பயிர்களை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது இப்பகுதி விவசாயிகள் மாற்று பயிர்களாக வசம்பு, கோலியாசிஸ் போன்ற மருத்துவ பயிர்களும், திசுவளர்ப்பு வாழை, செவ்வாழை, பேரீட்சை, பப்பாளி போன்ற பழ வகை பயிர்களை சாகுபடி செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பழ வகை மர சாகுபடியில் பப்பாளி சாகுபடி குறைந்த செலவில் அதிக லாபம் தருவதால், இதில் விவசாயிகள் அதிகளவில் தீவிரம் காட்டி வருகின்றனர். களிமண் தவிர பிற வகை மண்ணில் பப்பாளி மரங்கள் செழித்து வளரும் தன்மை கொண்டது.

மருத்துவ குணமிக்க பப்பாளி பழங்கள், உடலில் உள்ள ரத்தத்தை சுத்தபடுத்தவும், உடலை மெருகேற்றவும் பயன்படுவதால், பப்பாளி பழங்களுக்கு பொதுமக்களிடையே கிராக்கி அதிகரித்துள்ளது. "ரெட் லேடி' எனும் ஒட்டு வகை பப்பாளி செடியில் ஆண்டுக்கு 150 முதல் 200 கிலோ வரை காய்கள் மகசூல் கிடைக்கிறது. சுவை மிகுதியாக உள்ளதாலும், இந்த வகை பழ மர சாகுபடி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ஒரு ஏக்கர் நிலத்தில் 1000 கன்றுகள் நடவு செய்ய 200 கிராம் விதை போதுமானது. வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. மேலும் உர மேலாண்மை மிகவும் குறைவதால் சாகுபடி செலவும் மிகவும் குறைவாகவே உள்ளது.

பப்பாளி செடிகள் நடவு செய்த ஆறு மாதங்களில் 5 அடி உயரம் வரை மரங்கள் வளர்கின்றன. சாகுபடி செய்த ஏழு அல்லது 8வது மாதம் முதல் காய்கள் அறுவடைக்கு தயாராகின்றது. ஒட்டு ரக மரங்களில் காய்க்கும் காய்கள், 2 கிலோ எடை இருப்பதால் தினமும் 300 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. பப்பாளி பழம் ஒரு கிலோ 12 முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதால், கூடுதல் லாபம் கிடைக்கிறது. பப்பாளி செடியின் 30 மாத ஆயுட்காலத்தில் 200 டன் வரை மகசூல் கிடைக்கிறது. உள்ளூர் சந்தைகளிலும் சென்னை, பெங்களூரு போன்ற பெரு நகரங்களிலும் பப்பாளி பழங்களுக்கு சந்தை வாய்ப்புகள் அதிகரித்துள்ளது. குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் பப்பாளி சாகுபடி, கச்சிராயபாளையம் பகுதி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள் ளதுடன், சாகுபடி பரப்பளவும் அதிகரித்துள்ளது.

## வெற்றிலைக்கொடி நடவு செய்யமுதற்கட்ட பணிகள் துவங்கியது: பெரியகுளம் பகுதி விவசாயிகள் மும்முரம்

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகாவில் வெற்றிலைக் கொடி நடவு செய்வதற்காக முதற்கட்டமாக அகத்தி விதை விதைப்பு பணி துவங்கியுள்ளது.பெரியகுளம் தாலுகா, தெய்வேந்திரபுரம், கீழவடகரை, வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி,குள்ளப்புரம், நாகம்பட்டி, நல்லகருப்பன்பட்டி, தாமரைக்கும் ஆகிய பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் ஆகஸ்ட், செப்டம்பரில் வெற்றிலை சாகுபடிக்கு முதற்கட்டமாக அகத்தி விதைவிதைப்பு பணி துவங்கும், பின் 50 நாளில் இருந்து 60 நாளில் வெற்றிலைக் கொடி நடவுப் பணி துவங்கும்.கொடி நடவுக்குப் பின் 6 மாதங்கள் கழித்து வெற்றிலை அறுவடை செய்யலாம். தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெற்றிலைமதுரை, திண்டுக்கல், பழனி, கோவில்பட்டி, ராஜபாளையம் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரை இதன் பலனை அடையலாம்.சில்வார்பட்டியை சேர்ந்த விவசாயி பிச்சைமணி கூறியதாவது:தற்போது ஒரு கட்டு வெற்றிலைக் கொடி (200 கொடி ஒரு கட்டு) ரூ.300 க்கு விற்பனை செய்யப்படு கிறது. சோழவந்தான், வடுகபட்டி, சின்னமனூர் ஆகிய பகுதியில் வெற்றிலைக் கொடி விலைக்கு வாங்கி வருகிறோம். ஜெயமங்லகம், மேல்மங்கலம், சில்வார்பட்டி, வடுகபட்டி, நல்லகருப்பன்பட்டி, நாகம்பட்டி உட்பட 10 க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெற்றிலைக்கொடி நடவு பணி துவங்கியுள்ளது, என்றார்.

**அறுவடை செய்ய முடியாமல் வேர்க்கடலை விவசாயிகள் தவிப்பு**




வாலாஜாபாத்: அறுவடை நேரத்தில், போதிய மழை பெய்யாததால், மானாவாரி வேர்க்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகளிடையே, கவலை ஏற்பட்டு உள்ளது.

வாலாஜாபாத் ஒன்றியத்தில், புள்ளலுார், அரங்கநாதபுரம், பள்ளம்பாக்கம், சிறுவாக்கம், மேட்டூர், மூலப்பட்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், விவசாயிகள், 87 ஏக்கரில், ஜூன் மாதம், மானாவாரி பயிராக வேர்க்கடலை விதைகளை வயல்களில் விதைத்து உள்ளனர்.

பெரும்பாலான விவசாயிகளின் நிலங்களில், வேர்க்கடலை செடிகள் அறுவடை பருவத்தில் உள்ளன. போதிய பருவ மழை பெய்யாததால், வயலில் இருக்கும் வேர்க்கடலையை பறிக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இதுகுறித்து, மூலப்பட்டு விவசாயிகள் கூறியதாவது: ஜூன் மாதம் இறுதியில் மானாவாரி பயிராக வேர்க்கடலையை விதைத்தோம். ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மழை பெய்யும். அந்த நேரத்தில் வேர்க்கடலை செடிகளை பறிப்பது வழக்கம். இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், அறுவடை பருவத்தில் இருக்கும் செடிகளை பறிக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இருப்பினும், வேறு வழியின்றி

தண்ணீர் தெளித்து செடிகளை பறித்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடை ஆய்வாளர்கள் சங்க ஆலோசனை கூட்டம்

சங்கராபுரம்: தமிழகத்தில் புதிதாக கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் திறக்க உத்தரவிட்ட முதல்வருக்கு கால்நடை ஆய்வாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். கள்ளக்குறிச்சி கோட்ட தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர்கள் சங்க ஆலோசனைக் கூட்டம், சங்கராபுரத்தில் நடந்தது. கோட்ட செயலாளர் சிங்காரவேல்தலைமை தாங்கினார்.மாநில தணிக்கையாளர் முரளிகிருஷ்ணன், மாவட்ட இணை செயலாளர் முணியாண்டி, கால்நடை ஆய்வாளர்கள் சக்திவேல், கந்தன், தேவநாதன், செந்தில்முருகன், நேரு ஆகியோர் பேசினர். தமிழகத்தில் புதிதாக 100 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் துவங்க ஆணையிட்ட தமிழக முதல்வர் ஜெ., மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சின்னையா, ஊரக தொழில்துறை அமைச்சர் மோகன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றபட்டது. தனவேல் நன்றி கூறினார்.

## மேட்டூர் நீர்வரத்து கடும் சரிவால் டெல்டா நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து தொடர்ந்து சரிந்து வருவதால், டெல்டா பாசன நீர்திறப்பு, வினாடிக்கு, 13,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து கடந்த, 9ம் தேதி முதல் டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டுள்ளது. பாசனத்துக்கு வினாடிக்கு, 15,000 கனஅடி நீர் தொடர்ச்சியாக வெளியேற்றிய நிலையில், நீர்பிடிப்பு பகுதியில் நீடிக்கும் வறட்சி காரணமாக, நேற்று முன்தினம் வினாடிக்கு, 1,313 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று, 885 கனஅடியாக

குறைந்தது. நீர்வரத்து கடுமையாக சரிந்ததால், மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 13,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. நீர்திறப்பு கூடுதலாக இருப்பதால், கடந்த, 20 நாளில் மேட்டூர் அணை நீர்இருப்பு, 21 டி.எம்.சி., சரிந்தது. நேற்று அணை நீர்மட்டம், 74.120 அடியாகவும், நீர் இருப்பு, 36.145 டி.எம்.சி.,யாகவும் இருந்ததது. கடந்த ஆண்டு செப்டம்பர், 14ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 96.5 அடியாகவும், நீர் இருப்பு, 60.5 டி.எம்.சி.,யாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. நடப்பாண்டு சம்பா சாகுபடி ஆயத்த பணி நடக்கும் போதே, மேட்டூர் அணை நீர்இருப்பு வெகுவாக சரிந்துள்ளது, டெல்டா விவசாயிகளை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

## ஆந்திரா மிளகாய் வத்தல் வரத்து சரிவு: தமிழகத்தில் விலை கிடு கிடு உயர்வு

சேலம்: தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த, ஆந்திர மாநில மிளகாய் வத்தலின் வரத்து சரிந்ததால், அதன் விலை, ஒரே வாரத்தில் குவிண்டாலுக்கு, 4,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

சேலம் மாவட்டம், கொளத்தூர், மேச்சேரி, விருதுநகர், நாமக்கல், கரூர், ஈரோடு, சிவகங்கை, திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிளகாய் வத்தல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படும் மிளகாய் வத்தல், தமிழகத்தின் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் மிளகாய் வத்தலை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டனர். வடமாநிலங்களில் பெய்த தொடர் மழையால், அம்மாநிலங்களில் மிளகாய் வத்தலின் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வடமாநில வியாபாரிகள், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து நேரடியாக மிளகாய் வத்தலை, அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து, விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.

இதன் காரணமாக, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் மிளகாய் வத்தலில் சரிவு ஏற்பட்டதை அடுத்து, விலை உயர்ந்துள்ளது.

குண்டு மிளகாய் வத்தலுக்கு மார்க்கெட்டில் கடும் தட்டுப்பாடு நிலவுவதால், அவற்றின் விற்பனையை வியாபாரிகள் தற்காலிகமாக நிறுத்தி விட்டனர். சேலம் லீபஜாரை சேர்ந்த மிளகாய் வத்தல் வியாபாரி குணசேகரன் கூறியதாவது: தமிழகத்தில் மிளகாய் வத்தலின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. அதே நேரத்தில், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் மிளகாய் வத்தலின் வரத்தும் சரிந்துள்ளதால், விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

**தமிழகத்தில் மரவள்ளிக்கிழங்கு விளைச்சல் அதிகரிப்பு: 8 மாத்தில் 5 லட்சம் ஜவ்வரிசி மூட்டைகள் விற்பனை**

சேலம்: தமிழகத்தில், மரவள்ளிக்கிழங்கு விளைச்சல் அதிகரிப்பால், சேலம், சேகோசர்வில், எட்டு மாதத்தில், ஐந்து லட்சம் ஜவ்வரிசி மூட்டைகள் விற்பனையானது.

சேலம் மாவட்டத்தில், 85 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யயப்படுகிறது. இவற்றில் இருந்து, ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்பதற்காக தமிழகத்தில், 500க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலை உள்ளது. சேலம் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் (சேகோ சர்வ்), மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு நிதி உதவி மற்றும் ஜவ்வரிசியை சேமித்து வைத்து விற்பனை செய்வதற்காக, சேலத்தில்,கடந்த, 1982ல் ஏற்படுத்தப்பட்டது. ஒரு காலத்தில், விவசாயிகளிடம் இருந்து மரவள்ளி கிழங்குகளை இடைத்தரகர்கள் மிகவும் குறைவான விலைக்கு வாங்கி, அதன் மூலம், ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரித்து, பெரும் லாபம் பார்த்து வந்தனர். இதனால்,

விவசாயிகள் அதிகளவு பாதிப்படைந்து வந்தனர். இதை தடுப்பதற்காகவே சேக்கோசர்வ் உருவாக்கப்பட்டது. சேக்கோசர்வில் தமிழகத்தில் உள்ள, 350 ஜவ்வரிசி ஆலைகள் உறுப்பினர்களாகவுள்ளனர். இந்த ஆலைகள், தங்கள் பகுதியில் உள்ள மரவள்ளி கிழங்குகளை வாங்கி, அதை அரைத்து ஜவ்வரிசியாக மாற்றி, விற்பனைக்காக, சேலம் சேக்கோசர்வ்க்கு எடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து, சேகோசர்வ் நிர்வாக இயக்குனர் அருள்முருகன் கூறியதாவது: சேலம், சேக்கோசர்வ்வில், இரண்டரை லட்சம் மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மூட்டைகள் வேதியியல் துறை ஆய்வகத்தில் வைத்து பரிசோதனை செய்யப்படும். பின், டெண்டர் விடப்பட்டு, ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒரு விலை பட்டியலை தாயாரிப்பர். அதில், அதிக விலையில் யார் கேட்கிறார்களோ, அந்த விலைக்கு விற்பனை செய்யப்படும். சேகோசர்வ், 10 சதவீதம் மட்டும் பரிசோதனை செலவுக்கு எடுத்துக் கொள்ளப்படும். கடந்தாண்டு, இரண்டரை லட்சம் மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டு, கடந்த, எட்டு மாதத்தில் ஐந்து லட்சம் மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டது. இதற்கு, முக்கிய காரணம், நடப்பாண்டில் மரவள்ளி கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## செப்டம்பரில் கைகொடுக்கும் காற்றாலை: 2,100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி

மேட்டூர்: நடப்பாண்டு செப்டம்பர் மாதத்திலும் தென்மேற்கு பருவகாற்று சீஸன் நீடிப்பதால், காற்றாலைகளில் நேற்று, 2,100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியானது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் இறுதியில் தென்மேற்கு பருவகாற்று சீஸன் முடிந்து, வடகிழக்கு பருவகாற்று சீஸன் துவங்கி விடும். இதனால், தென்மேற்கு பருவகாற்றை நம்பியுள்ள, தமிழக காற்றாலைகளில் மின்

உற்பத்தி, 1,000 மெகாவாட்டுக்கும் கீழே குறைந்து விடும். நடப்பாண்டு, செப்டம்பர் மாதத்திலும் தென்மேற்கு பருவகாற்று சீஸன் நீடிப்பதால், 7,400 மெகாவாட் திறன் கொண்ட தமிழக காற்றாலைகளில், நேற்று முன்தினம், 2,870 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியானது. நேற்று காற்றாலை மின் உற்பத்தி, 2,170 மெகாவாட் ஆக இருந்தது. நடப்பாண்டு வடகிழக்கு பருவகாற்று தாமதம் ஆகும் நிலையில், செப்டம்பர் மாதத்தில் தென்மேற்கு பருவகாற்று நீடிப்பதால், காற்றாலைகளில், 2,900 முதல், 2,100 மெகாவாட் வரை, மின்சாரம் உற்பத்தியாகிறது. காற்றாலைகள் கைகொடுப்பதால் நேற்று தமிழகத்தின் மின் தேவை, 11,980 மெகாவாட் ஆக இருந்த போதிலும், தேவைக்கேற்ப மின்சாரம் வினியோகம் செய்யப்பட்டது.

## ஏரி, குளங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்ற வலியுறுத்தல்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், ஏரிகளில் உள்ள, கருவேல மரங்களை அகற்ற, மாவட்ட நிர்வாகத்துக்கு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், வாணியாறு, தொப்பையாறு உட்பட, எட்டு அணைகள் மற்றும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 73 ஏரி, குளங்கள் மற்றும் பஞ்சாயத்து கட்டுப்பாட்டில் உள்ள, 600க்கும் மேற்பட்ட ஏரி, குளங்கள் மூலம், கடந்த காலங்களில், நேரடியாகவும், மறைமுகமாகவும், 70 ஆயிரம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெற்று வந்தது. இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஏமாற்றி வருகிறது. இதனால், கடந்த, 10 ஆண்டுகளாக தண்ணீர் இன்றி, தும்பலஹள்ளி அணை வறண்டு, முட்புதர்கள் அதிகளவில் வளர்ந்து காணப்படுகிறது. இதே போன்று, மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகளில் முட்புதர்கள் அதிகளவில் வளர்ந்துள்ளது. மழை காலத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தேங்கும் மழை நீரை, கருவேல

மரங்கள் வேகமாக உறிஞ்சி வருவதால், ஏரி, குளங்களின் நீர் மட்டம் கேள்வி குறியாகி தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்ற, பொதுப்பணித்துறையினர் மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கு விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், இவற்றை அகற்ற போதிய நடவடிக்கை எடுக்காமல் உள்ளதால், விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி, அருகில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள, கருவேல மரங்களை அகற்ற, கலெக்டர் ராஜேஷ் உத்தரவிட்டு, பணிகளை தொடங்கியுள்ளார். அதே போன்று, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள, கருவேல மரங்களை அகற்ற, கலெக்டர் விவேகானந்தன் விரைந்து நடவடிக்கை எடுக்க, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆப்பிள் வரத்து அதிகரிப்பால்திராட்சைக்கு விலை சரிவு

கம்பம்:ஆப்பிள் வரத்து அதிகரிப்பால் திராட்சை விலையில் பலத்த அடி விழுந்துள்ளது.

ஆண்டுதோறும் திராட்சை கிடைக்கும் பகுதி என்ற பெருமையை கம்பம் பள்ளத்தாக்கு பெற்றுள்ளது. சர்வதேச அளவில் திராட்சை கிடைக்காத காலம் மற்றும் தேவை அதிகம் உள்ள நவம்பர், டிசம்பரில் திராட்சை கம்பம் பள்ளத்தாக்கில் மட்டுமே கிடைக்கும். காரணம் ஆண்டிற்கு மூன்று முறை அறுவடை செய்கின்றனர். எனவே தான் ஒயின் தயாரிப்பிற்கு கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை தகுதியில்லை என்று கூறுகின்றனர்.

திராட்சை விலை அடிக்கடி மாறும் தன்மை கொண்டதாக உள்ளது. கோடைகாலங்களில் நல்ல விலையும், குளிர் மற்றும் மழை காலங்களில் விலை குறைவாக கிடைப்பதும் வாடிக்கையாகும்.இந்நிலையில் கடந்த

10 நாட்களாக திராட்சை விலை கடுமையான சரிவை சந்தித்து வருகிறது. தற்போது கிலோ ரூ. 20 க்கு விலை கிடைக்கிறது. இதனால் திராட்சை விவசாயிகள் கவலையில் உள்ளனர். வடமாநிலங்களில் இருந்து ஆப்பிள் வரத்து அதிகரித்துள்ளதால், திராட்சை விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறியதாவது: ஆப்பிள் வரத்து அதிகமாக இருப்பதால் திராட்சை விலை குறைந்துள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு கிலோவிற்கு ரூ. 50 முதல் 60 வரை கிடைத்து வந்தது. தற்போது கிலோவிற்கு ரூ. 20 கிடைக்கிறது. ஆனால் விலை அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளது, என்றார்.

### ஜி 9 வாழை சாகுபடியை கை விட்ட விவசாயிகள்

தேனி:தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக ஜி 9 வாழை சாகுபடியை ஒரு விவசாயி கூட சாகுபடி செய்யவில்லை. இதனால் அடுத்த ஆண்டு இந்த வாழைக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் ஜி 9 வாழை சாகுபடி கடந்த மூன்று மாதங்களாக நடைபெறவில்லை.இந்த ரக வாழைக்கு தற்போது கிலோ 12 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கிறது. இந்த இடைவெளி கிடைத்துள்ளதால், புரட்டாசி மாதம் ஜி 9 சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அறுவடையின் போது அதிக விலை கிடைக்கும். நல்ல கிராக்கி இருக்கும். எனவே வரும் மாதங்களில் ஜி 9 வாழை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டால் லாபம் கிடைக்கும், என்றனர்

### மழைநீரை சேகரிக்க 15 அடி ஆழத்திற்கு உறை கிணறு!, வடிகால் இல்லாத இடங்களில் புதிய முயற்சி




சென்னை: மழைநீர் வடிகால் இல்லாத சாலைகளில், மழைநீர் தேங்காமல் தடுக்கவும், அந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரவும், 15 அடி ஆழத்திற்கு, மழைநீர் சேகரிப்பு உறை கிணறு அமைக்கும் புதிய முயற்சியில், மாநகராட்சி ஈடுபட்டுள்ளது.

சென்னை எதிர்கொள்ளும் பிரச்னைகளில், மழைக் காலங்களில் சாலைகளில் தேங்கும் மழைநீர் வெள்ளமும் ஒன்று. அதற்காகவே, பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது. விரிவாக்கப் பகுதிகளில் இனி மேல் தான், வடிகால் அமைக்கப்பட உள்ளது.

பல விமர்சனங்கள் ஆனாலும், வடிகால் பராமரிப்பு இன்மையால், வெள்ளம் தேங்கும் பிரச்னை இன்னும் தீரவில்லை. அதேநேரம், மழைநீர் வடிகாலில் விழும் மழைநீர், நேராக கடலில் சேரும்படி தான் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## பயிர்களில் பூச்சி நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



படி செய்யப் படும் பயிர்களில் செப்டம்பர் மாதத்தில் பூச்சி, நோய்களின் தாக்கத்தைக் குறைக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் தேவையான வழிமுறைகளை கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

நெல்பயிர்: நெல்லில் இலைச் சுருட்டுப் புழு, தண்டு துளைப்பான் தாக்குதலைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கு வயல்களில் விளக்கு பொறி (ஏக்கருக்கு ஒன்று) வைக்க வேண்டும்.

தேவைப்பட்டால் ஒரு ஏக்கருக்கு வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் அல்லது பிப்ரோனில் 5 எஸ்.சி. 500 மில்லியை நீரில் கலந்து பயிர்களில்

தெளிக்கவும். நாற்றங்காலில் (20 சென்டுக்கு) இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 50 மில்லியை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

குலை நோயானது இலையில் கண் வடிவ புள்ளிகளுடன் நடுப்பகுதி அகன்றும் முனைப் பகுதி குறுகியும் காணப்படும். பெரிய புள்ளிகளானது சாம்பல் நிற நடுப்பகுதியுடனும் பழுப்பு நிற ஓரங்களுடனும் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தாமதிக்கவும் அல்லது குறைத்து இடவும். ஹெக்டேருக்கு கார்பன்டாசிம் 500 கிராம் தெளிக்கவும்.

பருத்தி: பருத்தியில் காய்ப் புழுக்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 என்ற அளவில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும். தேவைப்பட்டால் இன்டாக்சாபார்ப் 14.5 எஸ்.சி 200 மில்லி (ஏக்கருக்கு) அல்லது ட்ரைஅசோபாஸ் 40 இ.சி 800 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

நிலக்கடலை: சிகப்பு கம்பளிப் பூச்சி, இலை துளைப்பானின் நடமாட்டத்தைக் கண்டறிய விளக்குப் பொறியை ஏக்கருக்கு ஒன்று வீதத்தில் வைத்து கண்காணிக்கவும். விளக்கு பொறியில் அந்திப் பூச்சிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பின் உடனடியாக் டைகுளோவாஸ் 76 டபிள்யு எஸ்.சி. 500 மில்லி அல்லது குளோர்பைர்பாஸ் 20 இ.சி. 500 மில்லி அல்லது பாசலோன் 35 இ.சி. 300 மில்லியை (ஏக்கருக்கு) தெளிக்க வேண்டும்.

விவசாய, தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் கட்டுப்பாடு சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ, மாவுப் பூச்சியின் சேதம் அதிகமாக வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறியை ஏக்கருக்கு 5 வீதம் வைத்து நடமாட்டத்தைக் கண்டறியலாம். தேவைப்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன்

எண்ணெய் சோப் 1 கிலோவை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் பாதுகாப்பு மைய இயக்குநரைத் தொடர்பு கொள்ளலாம் என்று பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**துல்லிய தொழில்நுட்பத்தில் செண்டு மல்லி சாகுபடி**



நடப்பு பருவத்துக்கு ஏற்றபடி துல்லிய தொழில்நுட்ப சாகுபடித் திட்டம் மூலம் செண்டுமல்லியைப் பயிரிடலாம் என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

செண்டு மல்லி எல்லாக் காலத்திலும் மக்கள் விரும்பி வாங்கக் கூடியது. சுப, துக்க காரியங்கள் போன்றவற்றுக்கும் செண்டுமல்லியை மக்கள் பயன்படுத்துகின்றனர்.

மண் வகை: செண்டுமல்லி அனைத்து வகையான மண்ணிலும், மணற்பாங்கான மண், களிமண் கலந்த மண்ணுக்கும் மிகவும் ஏற்றது.

பருவ காலம்: செண்டு மல்லியை அக்டோபர் - ஜனவரி பருவத்திலும், பிப்ரவரி -மே மாதம் வரையிலும் பயிர் செய்யலாம்.

விதையளவு: செண்டுமல்லி ஒரு ஹெக்டேருக்கு, குட்டை ரகத்துக்கு 75 ஆயிரம் விதைகளும், நெட்டை ரகத்துக்கு 55 ஆயிரம் விதைகளும் இட வேண்டும்.

நாற்றங்கால் பராமரிப்பு: பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க் கழிவை வளர் தட்டுக்களில் நிரப்பி குழிக்கு ஒரு விதை வீதம் நிரப்பி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி பாலித்தீன் பேப்பர் மூலம் மூடி மூன்று நாள்கள் 50 சதவீத நிழல் உள்ள இடத்தில் அல்லது நிழல் வலையில் வைக்க வேண்டும். அப்போது முளைப்புத் திறன் அதிகரிக்கும்.

பின்னர் ஒரு நாளைக்கு இரு முறை பூ வாளி மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 19:19:19 என்ற உரத்தை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து 15 நாள்கள் தெளிக்க வேண்டும்.

நடவு முறை, இடைவெளி: 25 நாள்கள் வயதான செண்டுமல்லி நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். குட்டை வீரிய ஒட்டு ரகத்தை 40 ல 30 சென்டி மீட்டர் அளவில் ஒரு ஹெக்டேருக்கு 74 ஆயிரம் செடிகளை நடலாம்.

நெட்டை வீரிய ஒட்டு ரகத்தை 60 ல 30 சென்டி மீட்டர் என்ற அளவில் 55 ஆயிரம் செடிகளை நடலாம்.

நீர்ப் பாசனம், நீர்வழி உரமிடுதல்: வீரிய ஒட்டு ரகத்துக்கு 90:90:75 வுடன் தழை, மணி, சாம்பல் சத்து ஆகியவற்றை பயிர் காலம் முழுவதும் நீர்ப் பாசனத்துடன் இட வேண்டும்.

களை எடுத்தல்: நடவு செய்த 30, 60-ஆம் நாள்களில் களை எடுக்க வேண்டும்.

மண் அணைத்தல்: களையெடுக்கும் சமயத்தில் மண் அணைத்தல்

அவசியம். இது நன்கு வேர் பிடிக்கவும், செடியின் தாங்கு திறனை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

அறுவடை: மேற்கண்ட முறைகளை முறையாக கடைப்பிடித்தால் நடவு செய்த 60-ஆம் நாளில் இருந்து மகசூல் கிடைக்கும். காலை நேரத்தில் பூக்களை செடியில் இருந்து பறித்து கூடை அல்லது சாக்குப் பையில் அடைத்து விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம் எனதோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். "செண்டு மல்லி எல்லா காலத்திலும் மக்கள் விரும்பி வாங்கக் கூடியது. சுப, துக்க காரியங்கள் போன்றவற்றுக்கும் செண்டுமல்லியை மக்கள் பயன்படுத்துகின்றனர்."

## இறைச்சி உற்பத்தியில் இந்திய எழுச்சி

இந்தியா என்றால் புலால் மறுப்பை வலியுறுத்திய வள்ளுவன், புத்தன், வள்ளலார், காந்தி உள்ளிட்ட எண்ணற்றோர் பிறந்த நாடு என்று பெருமைப்பட்டதெல்லாம் வீண். இறைச்சி உற்பத்தியிலும், நுகர்விலும் வரலாறு காணாத வளர்ச்சியை இந்தியா பெற்றுள்ளது. ÷சீனர்கள் பாம்பைத் தின்கிறார்கள், பூனை, எலி உண்கிறார்கள். புழு, பூச்சிகளையும் தின்கிறார்கள் என்று பழிப்பதுண்டு. ஆனால், தமிழர்களில் சில வகுப்பினர் பூனை, எலி உண்பதுண்டு. வட கிழக்கு இந்தியாவில் வாழ்வோர் சிலர் நாயைக்கூட விட்டு வைப்பதில்லையாம். ÷மனிதனுக்குப் புரதப் பசியைவிட இறைச்சிப் பசியே அதிகம். ஒரு காலத்தில் கோழி இறைச்சி அதிக விலையிலும் ஆட்டிறைச்சி குறைந்த விலையிலும் விற்றது. ஆனால், நாமக்கல்லில் தோன்றிய கோழிப் புரட்சி நாட்டையே வென்றது. கோழி விலை மலிந்தது; தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி மாவட்டங்களில் கோழி வளர்ப்பு மிகவும் லாபகரமான தொழிலாக மாறி வருகிறது.

÷இறைச்சிக் கோழி என்றாலும் முட்டைக் கோழி என்றாலும் கோழி கோழிதான். இது தொடர்பான ஒரு விவசாயப் புள்ளிவிவரம் சிறப்பானது.

கோழி, மாடு வளர்ப்பால் உயர்ந்தது இறைச்சி மட்டுமல்ல; மக்காச் சோள உற்பத்தியும்தான். இன்று தமிழ்நாட்டில் நெல்லுக்கு அடுத்தபடியாக மக்காச் சோள உற்பத்தி இரண்டாம் நிலையில் உள்ளது.

÷இவ்வாறே, இந்தியாவிலும் நெல், கோதுமைக்குப் பின் மூன்றாம் இடத்தில் மக்காச் சோள உற்பத்தி உள்ளது. இறைச்சிக் கோழி, கசாப்பு மாடுகளுக்கான தீவனத் தேவை காரணமாக இந்தியாவில் மக்காச் சோள உற்பத்தி உயர்ந்துள்ளது.

÷நாமக்கல் கோழிப் புரட்சிக்குப் பின் கோழி விலை விழுந்தது. கோழி உணவு உயர்ந்தது. இந்த அன்னிய தேசத்து வெள்ளைக் கோழி வளர்க்கப்படும் தொழில்நுட்பத்தைக் கவனித்தால் அந்தத் தொழில்நுட்பம் ஆரோக்கியமற்றது என்று புரிந்து கொள்ளலாம்.

÷கூண்டுகளில் வளர்க்கப்படும் இந்தக் கோழிகள், தென்னம்பஞ்சுப் படுக்கை மீது நெருக்கமாக ஒன்றுமீது ஒன்று மோதும் அளவில் ஊட்டம் கொடுத்துக் குஞ்சுகளைக் கொழுக்க வைத்து விற்கிறார்கள். அவ்வாறு வளர்க்கும்போது கோழிகள் இறக்கும். தொற்றுநோய் பரவும். அவ்வாறு தொற்றுநோய் பரவாமல் இருக்க கோழிகள் மீது, தடை செய்யப்பட்ட ஆன்டிபயாட்டிக் மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்வதானால் ஆக்சி டெட்ரா சைக்கிள், குளோர் டெட்ரா சைக்கிள், டாக்சி சைக்ளின், என்ரோ ஃப்ளோக்சாசின், சிப்ரோ ஃப்ளோக்சாசின் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

÷அப்படியும் நூற்றுக்கு 5 முதல் 10 கோழி இறக்கும். அவற்றை உண்ண இப்படிப்பட்ட கோழிப் பண்ணைகளில் நாய்கள் சுற்றித் திரியும். இந்தக் கோழிகள் அங்காடிக்கு வரும்போது அந்த இறைச்சிகளில் 10 முதல் 15 சதவீதம் ஆன்டிபயாட்டிக் எஞ்சியிருக்கும்.

÷தேன் விஷயத்திலும் இப்படித்தான். பெட்டிகளில் தேனீ வளர்ப்போர் தேனீக்கள் இறக்காமல் இருக்கத் தெளிக்கும் ஆன்டிபயாட்டிக் அத் தேனில் எஞ்சியிருக்கும்.

÷நீங்கள் கேட்கலாம். ஆன்டிபயாட்டிக்தானே. அது நல்லதுதானே. ஒரு டாக்டரிடம் கேட்டுப் பாருங்கள். அது ஆபத்தானது என்பார்கள். ஏனென்றால், நமது உடலில் உள்ள கிருமிகள் கோழிக்கறி, தேன் ஆகியவற்றில் எஞ்சியுள்ள ஆன்டிபயாட்டிக்கை எதிர்த்து வெல்லும் சக்தி பெற்று விடும். நமக்கு நோய் வரும்போது நம் உடலில் செலுத்தப்படும் ஆன்டிபயாட்டிக் வேலை செய்யாது. உண்மையில் இவற்றை உண்பதால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து மாறி மாறிப் புதிது புதிதான மருந்துகள் உண்டுப் பக்க விளைவுகளை அனுபவிக்க வேண்டும்.

÷கூண்டுகளில் வளர்க்கப்படும் வெள்ளைக் கோழி இறைச்சி எப்படியெல்லாம் வறுபடுகிறது என்று பார்த்தால் சில்லி சிக்கன், சிக்கன் ரோல், பீசா, பர்கர் என்று ஏகப்பட்ட அவதாரத்தை எடுத்துவிட்டது. ஒரு காலத்தில் மீன், முட்டை எல்லாம் தாவர உணவு என்று பேசப்பட்டது. இன்று அந்தப் பட்டியலில் சிக்கனும் சேர்ந்துவிட்டது.

÷இந்தியாவில் உள்ள மேல்ஜாதி ஹிந்துக்கள் - குறிப்பாக பிராமணர்கள், ஜெயின் என்ற பட்டப் பெயருள்ள ஹிந்துக்கள், சைவப் பிள்ளைமார் புலால் உண்பதில்லை. சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் போன்ற மென்தகடு நகரங்களில் பல்லாயிரக்கணக்கான பொறியாளர் இளைஞர் - இளம்பெண்கள் கூட்டம் ராப் பகலாய் கணினிகள் முன் கடுந்தவம் புரிவோர்களில் வெஜிடேரியன் என்று கூறிக் கொள்ளும் மேலே குறிப்பிட்ட மேல்ஜாதி யுவ - யுவதிகள் அமெரிக்க அறிமுகமான சிக்கன் பர்கருக்கு அடிமையாகிவிட்டனர்.

÷இப்படிப்பட்ட சாஃப்ட்வேர் நிறுவன உணவகங்களில் ஜங்க் ஃபுட்டுடன் "சிக்கன் பர்கருக்கு' ஏக வரவேற்பு உண்டு. சிக்கன் மட்டுமல்ல; பீஃப் மட்டன், போர்க் பர்கர்களும் உண்டு. அதாவது கோழிகளுடன், மாடு, ஆடு, பன்றி இறைச்சிகள் மேல்நாட்டு பாணி உணவாக புதிய பாங்குடன் பர்கர் பாஸ்தா, பீஸ்தா என்று புதிய புதிய பெயர்களில் வழங்கப்படலாம்.

÷ஹைதராபாத் ஓர் அற்புத நகரம். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையின் எடுத்துக்காட்டு. ஒரு பக்கம் ஏழை இஸ்லாமியச் சிறுமிகள் அரபு நாடுகளுக்குக் கடத்தப்படுவதில் முதலிடம் என்பதை மறந்துவிட்டு சாஃப்ட்வேர் தொழில், புலால் உணவு பற்றி அறிவோம். ஹைதராபாதில் "ஹலீம்' என்ற புலால் உணவு விழா பாரம்பரியச் சிறப்பு மிக்கது. ஒரு விதமான கோதுமை மாவு ரொட்டியில் மாட்டுக் கறி, ஆட்டுக் கறியுடன் கடலைப் பருப்பு கலந்த பிண்ட உணவு. பன்னுக்குள் மசாலா சிக்கன், வகை வகையான "நான் வெஜ்' பிரியாணி விழாவில் உண்டு.

÷இந்திய மொழிகளில் கலந்துவிட்ட ஒரு புதிய சொல் "நான் வெஜ்'. விமானத்தில் பயணிக்கும்போது, உணவு வழங்கும் விமானப் பணிப்பெண் பயணிகளிடம் "வெஜிடேரியன்?' என்று வினவும்போது இறைச்சிப் பிரியர்கள் "நான் வெஜ்' என்று சொல்ல வேண்டும். "நான் வெஜிடேரியன்' என்று பொருள் கொள்ளக் கூடாது.

÷இந்த விஷயத்தில் ஆய்வு மேற்கொண்ட ஹைதராபாத் நகராட்சி ஆணையர் சோமேஷ் குமாரின் "நான் வெஜ்' புள்ளிவிவரம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. ஹைதராபாதில் உள்ள 1.1 கோடி மக்களில் 78 லட்சம் மக்கள் "நான் வெஜ்' என்றும், ஹைதராபாதில் மட்டும் தினமும் 3 லட்சம் கோழிகள், 8,000 ஆடுகள், 2,500 மாடுகள், 50 பன்றிகள் கொல்லப்பட்டு உண்ணப்படுவதாகத் தெரிவித்தார். இஸ்லாமியர்களும், கிறித்துவர்களும் என்றுமே "நான் வெஜ்'. ஆனால், இப்போது சுமார் 90 சதவீத ஹிந்துக்களும் "நான் வெஜ்' - குறிப்பாக சிக்கனுக்கு அடிமை.

÷புத்தனை வணங்கும் இந்தியர்களில் பலர் மாட்டுக் கறிக்கு அடிமை. உலகத்துக்குக் கொல்லாமையை போதித்த புத்த மதம் இலங்கை, சீனா, ஜப்பான் நாடுகளில் பரவியிருந்தாலும், உயிர்களைக் கொல்வதே வாழ்க்கை நெறியானது. இந்தியாவிலும் நமது பாரம்பரியக் கருத்துகள் தவிடுபொடியான நிகழ்வுகள் உண்டு. பசு மாடுகளை தெய்வமாகப் போற்றி வளர்க்கும் இந்தியாவில் பசுவதை கூடிவருகிறதே தவிர

குறைந்தபாடில்லை.

÷மாட்டிறைச்சி ஏற்றுமதியில் பிரேசிலை பின்னுக்குத் தள்ளி இந்தியா முன்னேறிவிட்டது. மாட்டிறைச்சி ஏற்றுமதி மூலம் நாம் ஆண்டுதோறும் பெறும் அன்னியச் செலாவணி மதிப்பு 5,000 கோடி டாலர். உள்ளூர் வர்த்தக மதிப்பு அளவிடற்கரியது. பல கோடி டாலர்கள்.

÷பரந்தாமனாகிய பாலகிருஷ்ணன் குழல் ஊதினால் பிருந்தாவனத்தில் ஆயர்பாடி மாடுகள் மதி மயங்குமாம். இன்றுள்ள சூழ்நிலையில் யமுனைக் கரையில் உள்ள தில்லி, மதுரா பகுதிகளில் பசு மாடுகள் குறைந்து எருமை எண்ணிக்கை உயர்ந்துவிட்டது. ஏனெனில், பசுவை விட எருமையே லாபம். மாட்டிறைச்சியில் எருமையின் பங்கு அதிகம். பசுவதைத் தடுப்பு இருப்பினும், பசு - காளை இறைச்சிகளும் எருமை இறைச்சி என்ற லேபிள் பெற்று ஏற்றுமதியாகிறது? மாடு வளர்த்துப் பால் மூலம் வருமானம் பெறும் விவசாயிகள் சினை பிடிக்காத வெற்று மாடுகளையும், காளைக் கன்றுக் குட்டிகளையும் கசாப்புக்கு அனுப்புவதால் பெறும் வருமானம் பால் உற்பத்தியில் பால் விலை சரியும்போது சற்று ஈடுகட்டுகிறது.

÷வடகிழக்கு இந்தியாவில் - அதாவது அஸ்ஸôம், திரிபுரா, மணிப்பூர், நாகாலாந்து மாநிலங்களில் நாம் பசுக்களை வளர்ப்பதுபோல் பன்றிகளை வளர்க்கின்றனர். ஆட்டுப் பால், கழுதைப் பால் போல் பன்றிப் பாலை யாரும் அருந்துவதாகத் தெரியவில்லை. பன்றியிடம் பால் கறக்க முடியுமா என்பதும் புலிப்பால் கறந்த கதைதான்! முழுக்க முழுக்க இறைச்சிக்குத்தான். பொதுவாக இந்தியாவில் உள்ள ஆதிவாசிகள், ஷெட்யூல்டு வகுப்பினர் அனைவருமே நூறு சதவீதம் "நான் வெஜ்'.

÷இருப்பினும், ஊட்டச்சத்து நிபுணர்கள் சைவ உணவையே அலகாகப் பயன்படுத்துகின்றனர்! கலோரி உணவு என்பது மனிதனை குண்டாக்கும் தத்துவமே. புரதச் சத்துக்குப் போதுமான பருப்பு விளைச்சல் இந்தியாவில் இல்லை. உலகிலேயே அதிகம் பருப்பு விளைவிக்கும் நாடான

இந்தியாவில்தான் பருப்பு இறக்குமதியும் அதிகம். ஆகவே புரதச் சத்து வழங்கும் "நான் வெஜ்' இந்தியர்களின் தவிர்க்க முடியாத தேவை என்பது நடைமுறை.

÷எனினும், கசாப்புக் கடைகளில் ஆடுகளின் அழுகுரல் நெஞ்சைப் பரிதவிக்க வைக்கிறது. பட்டுக்கோட்டையாரின் பாடல் ஒன்றை நினைவுபடுத்தி அன்றாடம் இறக்கும் வாயில்லா ஜீவன்களுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்துவோம்:

"இரை போடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே இதுதான் உலகம், வீண்அனுதாபம் கொண்டு நீஒரு நாளும் நம்பிடாதே...

காலொடிந்த ஆட்டுக்காகக் கண்ணீர் விட்ட புத்தரும் கடல்போல் உள்ளங்கொண்ட

காந்தி ஏசுநாதரும் கழுத்தறுக்கும் கொடுமை கண்டு திருந்த வழி சொன்னதும் உண்டு காதில் மட்டும் கேட்டு அதை ரசிச்சாங்க-

ஆனாகறிக்கடையின் கணக்கைப் பெருக்கி வந்தாங்க'. இதுதான் இந்திய எதார்த்தம்.கட்டுரையாளர்: இயற்கை விஞ்ஞானி.

**வேளாண்மை பல்கலை.யில் கருத்தரங்கு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் எதிர்காலத்துக்கு உகந்த தொழில்நுட்பங்களை பரவலாக்குவது தொடர்பான சுற்றுச்சூழல் கருத்தரங்கு புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை பொறியியல் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய மாணவர்களால் நடத்தப்பட்ட இக்கோபெஸ்ட்-15 என்ற இந்த கருத்தரங்கிற்கு துணை வேந்தர் (பொறுப்பு) கு.ரா. ஆனந்தகுமார் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியது:

வேளாண்மைப் பல்கலைக்கழகம், மாணவர்களுக்கு, படிப்புடன் கூடிய தொழில் முனைவோர் பயிற்சி, தலைமைப் பண்பு, படைப்பாக்கச் சிந்தனை போன்றவற்றை கற்றுக் கொடுக்கிறது. இதை மாணவர்கள்

முறையாகப் பயன்படுத்திக் கொண்டு தங்களது திறமைகளையும், பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற கே.சி.பி. சோலார் இன்டஸ்ட்ரீஸ் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி அசோக்குமார், மும்பை ஆர்.எஸ்.எம். அட்வைஸி நிறுவன தலைமைச் செயல் அதிகாரி ராம்பாபு ஆகியோர் மாணவர்களின் திறன் வளர்ப்பு குறித்து பேசினர்.

வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் சி.திவாகர் துரைராஜ், பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் உள்ளிட்ட பலர் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

**"மீன் வளர்க்கும் குத்தகை: ஏலம் எடுக்க விண்ணப்பிக்கலாம்'**

தேனி மாவட்டத்தில் மீன் வளர்க்கும் குத்தகை உரிமையை ஏலம் எடுக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் நா. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தேனி மாவட்டத்தில் உள்ள 11 நீர்ப்பாசன கண்மாய்களில் தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின் கீழ், மீன் வளர்க்கும் குத்தகை உரிமை மீன் வளத்துறை மூலம் 2015-16 முதல் 2017-18 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப் புள்ளி மூலம் 8.10.2015 ஆம் தேதியில் முடிவு செய்யப்பட உள்ளது.

எனவே, ஆர்வமுள்ள மீன் வளர்ப்போர் உரிய ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் குத்தகை நிபந்தனைகளை 21.9.2015 முதல் 7.10.2015 வரை வைகை அணையில் செயல்படும், தேனி மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ரூ. 300 விண்ணப்பத் தொகை செலுத்தி பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**வேளாண் பொருள்களுக்கு மதிப்பு கூட்டுதல் பயிற்சி**

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகாமைத் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வேளாண் பொருள்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி ஜமுனாமரத்தூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்தார். கீழ்நெல்லி வேளாண் அறிவியல் நிலைய பயிற்சியாளர் மார்க்ரேட், வேளாண் அலுவலர் எழில் அரசு ஆகியோர் பயிற்சியளித்தனர்.

பயிற்சியின்போது விவசாய நிலங்களில் பயிரிடப்படும் விளைபொருள்களை நேரடியாக சந்தைக்கு கொண்டு விற்பதை விட ஊறுகாய், வத்தல் என மதிப்பு கூட்டி விற்றால் அதிக லாபம் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் சாமையில் சர்க்கரைப் பொங்கல், காய்கறிகளில் சூப் தயாரித்தல், சத்து மாவு தயாரித்தல் உள்ளிட்டவை குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

உதவி வேளாண்மை அலுவலர் கண்ணபிரான், அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர்கள் செல்வபாண்டியன், வீரபாண்டியன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் பாஸ்கர், பிரேம்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வேளாண் இயந்திரத்துக்கு மானியம் பெற விண்ணப்பிக்கலாம்

வேளாண் இயந்திரம், கருவிகளுக்கு மானியம் பெற விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நிகழாண்டில் வேளாண் பொறியியல் துறை மூலம் நெல் நடவு இயந்திரம், விதைக்கும் கருவி வாங்க மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி, நெல் நடவு இயந்திரத்துக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.94 ஆயிரம் முதல்

ரூ.2 லட்சம் வரையிலும், இதர விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் முதல் ரூ.2 லட்சம் வரையிலும் மானியம் வழங்கப்படும்.

விதைக்கும் கருவிக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.44 ஆயிரம் வரையிலும், இதர விவசாயிகளுக்கு ரூ.35 ஆயிரம் வரையிலும் மானியம் வழங்கப்படும்.

இத் திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம். ஊத்தங்கரை, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய வட்டார விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, 311, புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, (கிருஷ்ணகிரி மகளிர் காவல் நிலையம் அருகில்), கிருஷ்ணகிரி என்ற முகவரியிலும், ஒசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை சாலை, சானசந்திரம், ஒசூர் என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 825 கனஅடியாக சரிவு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 825 கனஅடியாக சரிந்தது.

தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெகுவாக சரிந்து வருகிறது.

புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 1,313 கனஅடி வீதம் வந்துகொண்டிருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை காலை நொடிக்கு 825 கனஅடியாக சரிந்தது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 15,800 கனஅடி வீதம் திறக்கப்பட்ட நீரின் அளவு, புதன்கிழமை மாலை முதல் நொடிக்கு 13,800 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 74.12 அடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு 36.34 டி.எம்.சியாக உள்ளது.**லாரி மீது பேருந்து மோதல்: 12 பேர் காயம்**சங்ககிரி அருகே லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில் 12 பேர் காயமடைந்தனர்.சேலத்திலிருந்து புதன்கிழமை இரவு ஈரோடு நோக்கி சென்ற அரசுப் பேருந்து, சங்ககிரி அருகே உள்ள காளிப்பட்டி பிரிவு சாலை மேம்பாலத்தில் நிறுத்தப்பட்டிருந்த லாரியின் பின்புறம் மோதியது. இதில் பயணிகள் கார்த்திகேயன் (38), அனந்தராமன் (32), விஜயகுமார் (38), உசேன் (38) நிர்மல் (34) உள்பட 12 பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சங்ககிரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து குறித்து சங்ககிரி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### அரியலூர் மாவட்டத்தில் எலி ஒழிப்புக்கு ரூ. 3.20 லட்சம்

அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் எலி ஒழிப்பு செயல்விளக்க முகாமுக்கு ரூ. 3.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம்.

அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளான தா.பழூர், திருமானூர், ஜயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் 40 ஊராட்சிகளில் எலி ஒழிப்பு செயல்விளக்க முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தா.பழூர் ஒன்றியம், கோடாலிகருப்பூர் கிராமத்தில் நடைபெற்ற முகாமில் வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம் செயல்விளக்கம் அளித்து முகாமை தொடங்கிவைத்தார். பின் இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

நெற்பயிர்களில் நெல் மணிகள் தோன்றும் பருவம், பால் கட்டும் பருவம், பூக்கும் பருவம் ஆகிய காலங்களில் எலிகள் தின்று சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால், விவசாயிகளுக்கு பெரும் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதை கருத்தில் கொண்டும், மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு தேவை கருதியும், உணவு உற்பத்தியை பெருக்கும் நோக்கத்திலும் அரசு இதுபோன்ற முகாம்களை நடத்த அறிவுறுத்தியுள்ளது.

அரியலூர் மாவட்டத்தை பொருத்தவரை 2.961 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு, டெல்டா பகுதிகளில் எலி ஒழிப்பு செயல்விளக்க முகாமுக்காக ரூ. 3.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தா.பழூர் ஒன்றியத்தில் கோடாலிகருப்பூர், சோழமாதேவி, தென்கச்சிபெருமாள்நத்தம், வேம்புக்குடி உள்பட 12 ஊராட்சிகள், திருமானூர் ஒன்றியத்தில் 25 ஊராட்சிகள், ஜயங்கொண்டம் ஒன்றியத்தில் 3 ஊராட்சிகள் என 80 செயல்விளக்க முகாம் நடைபெறுகிறது. இதில் 4 லட்சம் எலி தடுப்பு மருந்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

எலி தடுப்பு மருந்தை பெற்றுக்கொண்ட விவசாயிகள் அனைவரும் தங்களது விவசாய நிலங்களிலுள்ள எலி பொந்துகளில் தவறாமல் தடுப்பு மருந்தை இடவேண்டும். முக்கியமாக விவசாயிகள் இந்த மருந்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்றார்.

நிகழ்ச்சியில், தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிசாமி, ஊராட்சித் தலைவர்கள் கோடாலிகருப்பூர் கிருஷ்ணமூர்த்தி, தென்கச்சி மருதை, வேம்புக்குடி வீரமணி, கலியமூர்த்தி மற்றும் துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர் ஜோதி, அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருமானூர் ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் வேளாண்மை துணை இயக்குநர் மனோகரன், ஜயங்கொண்டத்தில் தரக்கட்டுப்பாட்டு உதவி

இயக்குநர் முரளிதரன் மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் திருமானூர் பாபு, அரியலூர் மோகன், செந்துறை ராஜசேகர், ஜயங்கொண்டம் பழனிசாமி, ஆண்டிமடம் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் பண்ணைக் கருவிகள்**

தோட்டக்கலைத் துறை மூலம் வேளாண் பண்ணைக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் நவீன வேளாண் பண்ணைக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மூலம் தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் 25 முதல் 35% மானியத்தில் 8 குதிரை சக்தி முதல் 20 குதிரை சக்தி கொண்ட மின் டிராக்டர்களும், 8 குதிரை சக்திக்கும் குறைவான சக்தி கொண்ட பவர் டில்லர்கள் ரூ. 40 ஆயிரம் மானியத்திலும் வழங்கப்படுகிறது. பண்ணைக்கருவி தேவைப்படும் விவசாயிகள் தங்களது நிலத்தின் கணினிச் சிட்டா, தோட்டக்கலை பயிர் செய்ததற்கான அடங்கல், குடும்ப அட்டை நகல், வரைபடம், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 3 ஆகிய ஆவணங்களுடன் தங்களது பகுதி வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி முன்பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் பயன்பெறலாம்.

**பொன்னமராவதி வட்டாரத்தில் 50% மானிய விலையில் தென்னங்கன்றுகள்**

பொன்னமராவதி வட்டார விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படுவதாகவும்

தென்னங்கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் பொன்னமராவதி உதவி வேளாண்மை அலுவலர் அருளானந்தம் (99438 79824), ஆலவயல் உதவி வேளாண்மை அலுவலர் குமாரசாமி (85089 88572), அரசமலை வேளாண்மை உதவி அலுவலர் மலர்விழி (98421 15904)
ஆகியோரைத் தொடர்பு கொண்டு பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் சி. ஜெயபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயத் தொழிலாளர்களுக்கு பயிற்சி முகாம்

நாகப்பட்டினத்தில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் நாகை மாவட்டக் குழு சார்பில், விவசாயத் தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.
பயிற்சி வகுப்பு பேரவைக்கு விவசாயத் தொழிலாளர் சங்க நாகை மாவட்டச் செயலர் ஜி. ஸ்டாலின் தலைமை வகித்தார். பயிற்சி முகாமின் முதல் அமர்வில் விவசாயத் தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்னைகள் என்னும் தலைப்பில் மாநிலப் பொருளாளர் வீ. அமிர்தலிங்கம் விளக்கவுரை நிகழ்த்தினார்.
இரண்டாம் அமர்வில் கிராமப்புற உழைப்பாளிகளை அணி திரட்டுவதன் அவசியம் என்னும் தலைப்பில் மாநில பொதுச் செயலர் ஜி. மணி உரையாற்றினார். இதில் தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட துணைத் தலைவர் எம். காத்தமுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை ஒன்றியச் செயலர் எம். சுப்பிரமணியன், விவசாயத் தொழிலாளர் சங்க நாகை ஒன்றியச் செயலர் எஸ்.என். ஜீவாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 25இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (செப்.18) நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் செப்.25ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படுவது வழக்கம். இதன்படி, செப்டம்பர் மாதத்துக்கான கூட்டம் இம்மாதம் 18ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நிர்வாக காரணங்களால், இக்கூட்டம் இம்மாதம் 25 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் அன்றைய தினம் காலை 10 மணிக்கு ஆட்சியர் தலைமையில் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை: பாபநாசம் அணை நீர்மட்டம் உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மிதமான மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் கடந்த சில தினங்களாக மிதமான மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 12 மி.மீ., சேர்வலாறு அணையில் 5 மி.மீ., கடனாநதி அணையில் 1 மி.மீ., ராமநதி அணையில் 8 மி.மீ., குண்டாறு அணையில் 17 மி.மீ., அடவிநயினார் அணையில் 9 மி.மீ., ராதாபுரத்தில் 4 மி.மீ., தென்காசியில் 6 மி.மீ., செங்கோட்டையில் 8 மி.மீ. மழை பதிவானது. தொடர்ந்து பெய்த மழையால் பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1102.19 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 52 கனஅடியும், கடனாநதி அணைக்கு 60.76 கனஅடியும், ராமநதி அணைக்கு 33.07 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 25 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. இதையடுத்து பாபநாசம் அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 54.50 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 68.86 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 55.70 அடியாகவும்,

கடனாநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 27 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 54.30 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 33.45 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 56.25 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 24.12 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 14.75 அடியாகவும் இருந்தது.

**வீட்டுத் தோட்டம் அமைக்க பயிற்சி**

விழுந்தயம்பலத்தில் கிரீன் அக்ரி கிளப் சார்பில், இயற்கை முறையில் வீட்டுத் தோட்டம் அமைத்து பயிர்கள் வளர்ப்பு குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு விழுந்தயம்பலம் புனித அந்தோனியார் ஆலய பங்கு அருள்பணியாளர் சேகர் மைக்கேல் தலைமை வகித்தார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மரிய புஷ்பம் முன்னிலை வகித்தார்.

பயிர்கள் வளர்ப்பு குறித்து வேளாண் அறிஞர் ராஜகுமார் செய்முறை பயிற்சி அளித்தார். இதில் கீரை வகைகள், பயிர் வகைகள், காய், கனி உள்ளிட்டவற்றை வளர்த்து விளைச்சலை பெருக்குவது குறித்து அவர் பேசினார்.

மேலும் வீட்டுக் கழிவுகளை உரமாக்குதல், கால்நடை கழிவுகளை உரமாக்குதல், நஞ்சில்லா முறையில் காய்கனிகளுக்கு மருந்து தெளிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பின்பு விமலா குளோரி, ரெக்ஸிலின், சிசிலி ஆகியோர் தலைமையில் வீட்டுத் தோட்டங்கள் அமைக்க குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

முகாமில் விழுந்தயம்பலம் சுற்றுவட்டாரப் பகுதிகளான ஆப்பிகோடு, குஞ்சாகோடு, தொழிக்கோடு, தொலையாவட்டம், கிள்ளியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து திரளான பெண்கள் பங்கேற்றனர்.

**தீவனப்பயிர் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

விருத்தாசலத்தில் விவசாயிகளுக்கு தீவனப்பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது.

விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், கால்நடைகளுக்குத் தேவையான சமச்சீரான சத்துள்ள தீவனத்தை ஆண்டு முழுவதும் கொடுப்பதன் மூலம் அவற்றின் உண்மையான உற்பத்தித் திறனை பெற முடியும் என்பது குறித்தும், இதற்கு கால்நடைகளுக்கு பசுந்தீவனம் அளிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

பயிற்சி வகுப்பை விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் மு.சை.அனீசாராணி தொடங்கிவைத்தார். வேளாண்மை அறிவியல் நிலை உதவிப் பேராசிரியர் ம.நிர்மலா தேவி தீவனப் பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். இதில், அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் க.நடராஜன், அ.ரமேஷ்குமார், கு.பொற்கொடி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பிபிடி நெல் சாகுபடி மேலாண்மை முறைகள்**

பிபிடி நெல் பயிருக்கான சாகுபடி மேலாண்மை முறைகள் குறித்து கடலூர் வேளாண்மை இணை இயக்குநர் த.தனசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் பயிர் சாகுபடி தொடங்கியுள்ளது. இதற்காக விவசாயிகள் நாற்றுவிடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் பிபிடி ரக நெல் நாற்றும் விடப்பட்டுள்ளது. பிபிடி ரகமானது பல்வேறு பூச்சிகளால் பூஞ்சான நோய்கள் மற்றும் பாக்டீரியாவினால் ஏற்படும் நோய் தாக்குதலுக்கு அதிகம் உள்படக் கூடியது.

குறிப்பாக இலைசுருட்டுப் புழு புகையான், தண்டு துளைப்பான் பூஞ்சான நோய்களான இலைப் புள்ளிநோய், இலையுறை அழுகல், நோய் தண்டு அழுகல் நோய், பாக்டீரியாவினால் இலை கருகல் நோய், குலை நோய் ஆகியன அதிகம் தாக்கி பாதிப்பு ஏற்படுத்தும்.

வளர்ச்சிப் பருவத்தில் மப்பும் மந்தாரமான சூழ்நிலை, வயலில் அதிக அளவு தண்ணீர் தேக்குதல், தேவைக்கு அதிகமான யூரியாயிடுதலால் பூச்சி மற்றும் நோய் பரவுதலை அதிகரிக்கும்.

எனவே, பிபிடி-க்கு மாற்று சன்ன ரகங்களான ஆடுதுறை-49, கோ (ஆர்)-51 ஆகியவற்றை மானிய விலையில் பெற்று சாகுபடி செய்ய விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாறாக, தவிர்க்க இயலாத சூழ்நிலையில் பிபிடி ரகம் சாகுபடி செய்ய நேரிடும் போது கண்டிப்பாக விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

தழைச்சத்து உரங்களை மண் ஆய்வு பரிந்துரை அடிப்படையில் 2 அல்லது 3 தடவை பிரித்து இட வேண்டும். பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு கரைசலை ஒரு லிட்டர் நீரில் 5 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

பூஞ்சானம் மற்றும் பாக்டீரியாவினால் இலைக் கருகல் நோய்களின் தாக்குதலுக்கு தக்க மருந்தினை நட்ட 25-ஆம் நாள் மற்றும் நட்ட 50-ஆம் நாளில் தெளித்தல் வேண்டும்.

எனவே அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகி பயன்பெற வேண்டும் என அந்த செய்திக் குறிப்பில் த.தனசேகரன் தெரிவித்துள்ளார்.

**உளுந்தூர்பேட்டை சந்தையில் ரூ.5 கோடிக்கு ஆடுகள் விற்பனை**

உளுந்தூர்பேட்டையில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டுச் சந்தையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு ரூ.5 கோடிக்கு ஆடுகள் விற்பனையானது.

உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகே சேலம் சாலையில் வாரம்தோறும் புதன்கிழமை ஆட்டுச் சந்தை நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்டுச் சந்தைக்கு உளுந்தூர்பேட்டை சுற்று வட்டார கிராமங்களான களமருதூர், கிள்ளனூர், குன்னத்தூர், கிளியூர், கிளாப்பாளையம், மாம்பாக்கம், மேப்புலியூர் உள்ளிட்ட 100-க்கும்

மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள், பொதுமக்கள் ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வருவர்.

வருகிற செப்.24-ம் தேதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளதால், பண்டிகைக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து அதிகளவில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வந்திருந்து ஆடுகளை வாங்கிச் சென்றனர்.

மேலும், வியாபாரிகள் முன்கூட்டியே ஆடுகளை வாங்கி வைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளதால் உளுந்தூர்பேட்டை வார ஆட்டுச் சந்தையில் வெள்ளாடு ஒவ்வொன்றும் ரூ.7 ஆயிரத்தில் இருந்து ரூ.15 ஆயிரம் வரை விற்பனையாகியுள்ளன.

இதனால், புதன்கிழமை நடைபெற்ற ஆட்டுச் சந்தையில் ரூ.5 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

சேலம் நெடுஞ்சாலை அருகில் நடைபெற்று வந்த ஆட்டுச் சந்தை, ஆடுகளின் எண்ணிக்கை பல மடங்கு ஆனதால், பெரிய ஏரிக் கரைக்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு நடைபெற்றது.

மேலும், ஆடுகள் திருடு போவதைத் தடுப்பதற்காக 20-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## குமரி மாவட்டத்தில் தொடர்மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



குமரி மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நாள்தோறும் மழை

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. நாள்தோறும் தொடர்ந்து மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குமரி மாவட்டத்தில் நேற்று காலை 6 மணி நிலவரப்படி மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–பேச்சிப்பாறை–5.2, பெருஞ்சாணி–7.6, சிற்றார் (1) –24, சிற்றார் (2) – 7.2, பொய்கை–2.2, மாம்பழத்துறையாறு–13, இரணியல்–12, ஆனைக்கிடங்கு–15, குளச்சல்–15.2, குருந்தன்கோடு–11.4, அடையாமடை–6, கோழிப்போர்விளை–11.6, முள்ளங்கினாவிளை–38, புத்தன்அணை–6.8, நாகர்கோவில்–14.8, பூதப்பாண்டி–8, சுருளோடு–4.4, கன்னிமார்–5.5, பாலமோர்–7.5, மயிலாடி–14.2, கொட்டாரம்–13.8.

அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு மழை காரணமாக அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 519 கனஅடி வந்தது. ஆனால் நேற்று 702 கனஅடி தண்ணீர் வந்தது. இதைப்போல பெருஞ்சாணி அணைக்கு நேற்று முன்தினத்தைவிட சுமார் 150 கனஅடி அதிகமாகி 332

கனஅடி தண்ணீர் வந்தது. இதைப்போல குளங்களிலும் அதிகளவு தண்ணீர் சேர்ந்தது. பொதுப்பணித்துறைக்கு சொந்தமாக குமரி மாவட்டத்தில் 2040 குளங்கள் உள்ளன. இவற்றில் 615 குளங்கள் நிரம்பி வழிகின்றன. 590 குளங்களில் 75 சதவீதமும், 437 குளங்களில் 50 சதவீதமும், 398 குளங்களில் 25 சதவீதமும் தண்ணீர் உள்ளது.

## விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு 15 டன் பூக்கள் வரத்து



திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு, விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேற்று 15 டன் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.

பூமார்க்கெட்

திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு, வெள்ளோடு, வடக்கு மேட்டுப்பட்டி, உலகம்பட்டி உள்பட பல்வேறு கிராம பகுதிகள் மற்றும் ஓசூரில் இருந்து பூக்கள் விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மல்லிகை, முல்லை, கனகாம்பரம் போன்ற பூக்கள் விலை உயர்ந்தது. வாடாமல்லி, செண்டுமல்லி போன்றவை விலை உயரவில்லை. இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

15 டன் பூக்கள்

ஓசூரில் இருந்து நேற்று சுமார் 7 டன் அளவில் செண்டு மல்லியும், கிராம பகுதிகளில் இருந்து சுமார் 8 டன் அளவில் அனைத்து வகையான பூக்களும் சேர்த்து 15 டன் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இன்று (வியாழக் கிழமை) விநாயகர் சதுர்த்தி மற்றும் முகூர்த்த நாள் என்பதால் பூக்கள் விற்பனை களை கட்டியது.அதன்படி கனகாம்பரம் கிலோ ரூ.500-க்கும், மல்லிகைப்பூ ரூ.400-க்கும், ஜாதிப்பூ ரூ.200-க்கும், காக்கரட்டான் ரூ.200-க்கும், ரோஜா ரூ.100-க் கும், செவ்வந்தி ரூ.150-க்கும், சம்பங்கி ரூ.400-க்கும், அரளி ரூ.320-க்கும், வாடாமல்லி ரூ.10-க்கும், செண்டு மல்லி ரூ.20-க்கும், மருகு ரூ.25-க்கும், துளசி ரூ.15-க்கும், அருகம்புல் சிறிய கட்டு ரூ.15-க்கும், பெரிய கட்டு ரூ.40-க்கும் விற்பனை ஆனது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### ஊட்டி உருளைக்கிழங்கு விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் கவலை

45 கிலோ மூட்டை 800 ரூபாய்க்கு விற்பதன் மூலம் ஊட்டி உருளைக்கிழங்கு விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.மலை காய்கறிகள் நீலகிரி மாவட்டத்தில் விளையும் மலை காய்கறிகளுக்கு தனி மவுசு உண்டு. இதற்கு காய்கறிகளின் தரமும், சுவையுமே காரணம். இதனால் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் விளையும் காய்கறிகளை விட, மலை காய்கறிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. மற்ற வெளிமாநிலங்களில் விளையும் உருளைக்கிழங்கை காட்டிலும் நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்குக்கு கிராக்கி அதிகம்.

உருளைக்கிழங்கு

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக பச்சை தேயிலை விலை கடும் வீழ்ச்சி ஏற்பட்டதால் தேயிலை விவசாயம் செய்து கொண்டு இருந்த சிறு, குறு விவசாயிகள் மாற்று பொருளாதார தேவைக்காக வேறு பயிர்களை பயிர் செய்ய தொடங்கினார்கள். அதன்படி விவசாயிகள் சிலர் தங்கள் தேயிலை செடிகளுக்கு இடையே மலைத்தோட்ட காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு, கோஸ், கேரட், பீட்ரூட் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர். சில விவசாயிகள் தங்களிடம் உள்ள தேயிலை தோட்டத்தை அழித்து விட்டு முழு விவசாயமாக மலை தோட்ட பயிர் களை சாகுபடி செய்ய தொடங்கி உள்ளனர்.

குறிப்பாக கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கெரடாமட்டம், கேசலாடா, நெடுபுழா, பில்லிகம்பை, கட்டபெட்டு, கூக்கல்தொரை, கீழ்கோத்தகிரி, புடியங்கி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவு உருளைக்கிழங்கு சாகுபடி செய்து உள்ளனர். உருளைக்கிழங்கு 3 மாத பயிர் ஆகும். நீலகிரி மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

800 ரூபாய்க்கு விற்பனை

மற்ற காய்கறி பயிர்களை காட்டிலும் உருளைக்கிழங்கு கூடுதல் நாட்கள் வைத்து விற்க முடியும். எளிதில் அழுகாது. இதனால் விவசாயிகள் பெரும்பாலானோர் உருளைக்கிழங்கு சாகுபடி செய்ய விரும்புகிறார்கள். நீலகிரியில் நிலவும் தட்ப, வெப்ப சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் உருளைக்கிழங்கும் அதிக அளவு மகசூல் கிடைக்கிறது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நடவு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு இப்போது அறுவடைக்கு தயார் ஆகி விட்டது. ஆங்காங்கே பயிரிடப்பட்டு உள்ள

உருளைக்கிழங்குகளை விவசாயிகள் அறுவடை செய்து அதை விற்பனைக்கு லாரிகள் மூலம் அனுப்பி வருகிறார்கள். ஆனால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு உருளைக்கிழங்கு 45 கிலோ மூட்டை வெறும் 800 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இதனால் உருளைக்கிழங்கு விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

சில விவசாயிகள் இன்னும் விலை அதிகரிக்கும் போது உருளைக்கிழங்குகளை விற்பனைக்கு அனுப்பி வைக்கலாம் என்று கருதி, தங்கள் வீடுகளில் உள்ள அறைகளில் அதை பதப்படுத்தி வருகின்றனர்.

விவசாயிகள் கவலை

இது குறித்து புடியங்கியை சேர்ந்த விவசாயி சிவகுமார் கூறியதாவது:-

நாங்கள் நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்குகளை 45 கிலோ மூட்டைகளாக கட்டி லாரிகள் மூலம் மேட்டுப்பாளையம் மொத்த உருளைக்கிழங்கு மண்டிக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்து வருகிறோம். கடந்த சில மாதங்களாக உருளைக்கிழங்குக்கு எதிர்பார்த்த விலை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 45 கிலோ மூட்டை ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 45 கிலோ மூட்டை 800 ரூபாய்க்கு தான் விற்பனை ஆகிறது. உருளைக்கிழங்கு அறுவடை செய்ய கூலி ஆட்களுக்கு சம்பளமாக ஒரு நாளைக்கு 300 முதல் 500 ரூபாய் வரை செலவாகிறது. அது போல் பயிர் செய்தவற்கான உரம், மருந்து உள்ளிட்ட செலவுகளும், உருளைக்கிழங்கை மண்டிக்கு கொண்டு வர லாரிகள் வாடகை என குறிப்பிட்ட தொகை இதற்கே செலவாகிறது. விலை குறைந்ததால் விவசாயிகள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறார்கள்.இவ்வாறு அவர் கூறினார்.

## ஊட்டியில் உலக ஓசோன் தின நிகழ்ச்சி



ஊட்டி நகர மக்கள் விழிப்புணர்வு சங்கம் சார்பில் டேவிஸ் பூங்காவில் உலக ஓசோன் தின நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் எச்.பி.எப். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், சி.எஸ்.ஐ., சி.எம்.எம். பள்ளி மாணவ–மாணவிகள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடவு செய்தனர். இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய விழிப்புணர்வு சங்க தலைவர் ஜனார்த்தனன் பேசும் போது கூறியதாவது:–

நீலகிரியின் தண்ணீர் அதிகளவு மாசடைந்து வருகிறது. மரங்கள் வெட்டப்பட்டு கட்டிடங்கள் அதிகரித்து வருவதால் ஊட்டியின் காலநிலையில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இவற்றை தடுக்க நாம் அதிகளவு சோலை மரக்கன்றுகளை நடவு செய்ய வேண்டும் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் வக்கீல் விஜயன், ஸ்டெர்லிங் நிர்வாக இயக்குனர் மனோகரன், சோலூர் கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் அரசு பள்ளி ஆசிரியர் நாகராஜ் நன்றி கூறினார்.

## 1½ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட இலக்கு அதிகாரி தகவல்



தஞ்சை கோட்டத்தில் 1½ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. வருகிற 21-ந்தேதி கடைசி நாள் என உதவி இயக்குனர் கூறி உள்ளார்.

கோமாரி நோய் தடுப்பூசி

தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 9-வது சுற்று கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் கடந்த 1-ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை கோட்டத்திலும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது.

தஞ்சையை அடுத்த நாஞ்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்துக்குட்பட்ட கால்நடை மருத்துவமனைகளில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறுவதை கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது கால்நடை மருத்துவர் முகமதுஷெரீப், ஆய்வாளர்கள் ராமு, ஞானசேகரன், உதவியாளர்கள் ரகுநந்தன், ஜான்சன் ஆகியோர் உடன் இருந்தனர்.

21-ந்தேதி கடைசிநாள்

பின்னர் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறுகையில், “கால்நடை பராமரிப்புத்துறை தஞ்சை கோட்டத்தின் சார்பில் 1 லட்சத்து 44 ஆயிரத்து 400 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த 1-ந்தேதி முதல் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. நாஞ்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்துக்குட்பட்ட மருங்குளம், குருங்குளம் மேற்கு, குருங்குளம் கிழக்கு, நாஞ்சிக்கோட்டை, விளார் ஆகிய பகுதிகளில் மட்டும் 7 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. விடுபட்ட கால்நடைகளின் உரிமையாளர்கள் கடைசி நாளான வருகிற 21-ந்தேதிக்குள் அந்தந்த பகுதியில் நடைபெறும் முகாமில் தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்”என்றார்.

## நெல்சாகுபடி முறையில் புதிய தொழில்நுட்ப முறைகள் அறிமுகம்




சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம், வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நெல் சாகுபடி முறையில் புதிய தொழில்நுட்ப முறைகளை ஆராய்ச்சி செய்து அறிமுகம் செய்துள்ளது. இது தண்ணீர், ஆட்கள் பற்றாக்குறையை சரி செய்ய எளிய வழி ஆகும்.

தானிய முனைப்பு திட்டம்

பிலிப்பைன்சில் உள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஆடுதுறையில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையம், தஞ்சை காட்டுத்தோட்டத்தில் உள்ள மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இணைந்து தெற்காசிய நாடுகளின் தானிய முனைப்பு திட்டம் என்ற பெயரில் நெல் உள்ளிட்ட பயறு வகை சாகுபடி முறையில் புதிய தொழில்நுட்பங்களை காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆராய்ச்சி செய்து அறிமுகப்படுத்தி உள்ளது.

இது குறித்து சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி நோயல்மேகர், நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தென்னை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன், தெற்காசிய நாடுகளின் தானிய முனைப்பு திட்ட மேலாளர் கணேஷமூர்த்தி ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் தெற்காசிய நாடுகளில் தானிய முனைப்பு திட்டம் என்ற பெயரில் 3 வழிகள் குறித்து காவிரி டெல்டா பகுதியில் கடந்த 2009-ம்ஆண்டு முதல் ஆராய்ச்சி மேற்கொண்டது. இந்த ஆராய்ச்சி இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இந்த ஆராய்ச்சி சுமார் 70 ஆயிரம் ஏக்கரில் செயல்விளக்கம் மூலம் செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் வளங்களை சேமிக்கும் தொழில்நுட்பமாகும். இந்த திட்டங்களை தமிழ்நாடு பல்கலைக்கழகம் தொடர்ந்து செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளும்.

புழுதியில் நேரடி நெல்விதைப்பு

இந்த ஆராய்ச்சி புழுதியில் நேரடி நெல் விதைப்பு, சேறு இல்லா எந்திர நடவுமுறை மற்றும் லேசர் முறையில் மண்ணை எந்திரம் மூலம் சமன்ளபடுத்தும் முறை ஆகியவை களை கொண்டது.

இதில் புழுதியில் நேரடி நெல் விதைப்பு என்பது புழுதி வயலில் டிராக்டரை பயன்படுத்தி நேரடியாக விதை மற்றும் உரம் விதைப்பு செய்வது ஆகும். குறுவை, முன்சம்பா மற்றும் கோடை பருவத்தில் எந்திரத்தை பயன்படுத்தி இந்த விதைப்பு முறையை செய்யலாம்.

இந்த முறைக்கு நீரின் தேவை 45 சதவீதம் குறைகிறது. குறைந்த வேலையாட்கள் போதும். இடுபொருட்கள், விதைகள் குறைந்த அளவே போதும். பூச்சி, நோய் தாக்குதல் குறைகிறது. சாகுபடி செலவு 50 சதவீதம்

குறைகிறது. இதற்கு நிலத்தை உழுத பின்னர் லேசர் எந்திரத்தைக்கொண்டு சமன்படுத்த வேண்டும்.

சேறு இல்லா எந்திர நடவு

சேறு இல்லா எந்திர நடவு முறை என்பது குறைந்த தண்ணீரை பயன்படுத்தி நிலத்தை கொக்கி கலப்பை கொண்டு ஒருமுறை உழவு செய்து எந்திரத்தின் மூலம் நடவு செய்வது. இதன் மூலம் 50 சதவீத தண்ணீர் தேவை குறைகிறது. இதற்கு உழவு செலவு, ஆட்கள் செலவு குறைகிறது. நிலத்தை சமன்செய்யக்கூடிய லேசர் எந்திரம் கொண்டு சமன் செய்ய வேண்டும். இந்த முறைகளில் சாகுபடி செய்தால் எக்டேருக்கு 5 டன் வரை மகசூல் கிடைத்துள்ளது.

குறைந்த செலவு, குறைந்த தண்ணீர், வேலையாட்கள் பற்றாக்குறை இன்றி இந்த மகசூல் பெறலாம். இதன் மூலம் இளையதலைமுறையினர் விவசாயத்தில் ஈடுபட ஆர்வம் ஏற்படும்.புழுதி முறையில் சாகுபடி திருத்துறைப்பூண்டி பகுதியில் செய்தாலும், அதற்கு அதிக விதைநெல் செலவுசெய்தனர்.

தற்போது அதில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சாகுபடி செய்வது குறித்து இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இந்த எந்திரங்களின் மூலம் நெல் மட்டுமல்லாது மக்காச்சோளம், உளுந்து, சோளம் போன்ற பயறுவகை பயிர்களையும் சாகுபடி செய்யலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வேளாண்மை கிட்டங்கி காவலர் பணிக்கு உடற்தகுதி தேர்வு



நெல்லை,

நெல்லை மாவட்டத்தில் 50 வேளாண்மை விரிவாக்க மையங்கள் உள்ளன. இந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள வேளாண் பொருட்களை பாதுகாக்க கிட்டங்கிகள் உள்ளன. இந்த கிட்டங்கிகளில் 42 இடங்கள் காலியாக உள்ளன.

அந்த பணியிடங்களை நிரப்புவதற்கான உடற்தகுதி தேர்வு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடந்தது. இந்த தேர்வு வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன், தேர்வு குழு தலைவர் பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடந்தது. மாவட்ட விளையாட்டு அலுவலர் பிராங்பால் ஜெயசீலன், பயிற்சியாளர் பிரேம்குமார் ஆகியோர் உடற்தகுதி தேர்வை நடத்தினார்கள்.

இதில் 100, 400 மீட்டர் ஓட்டம், குண்டு எறிதல், சைக்கிள் போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடந்தன. இதைத்தொடர்ந்து சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணியும் நடந்தது.

ஏற்கனவே வேளாண்மை துறையில் காலியாக இருந்த டிரைவர் பணியிடங்களுக்கு நடந்த தேர்வால் பொறியாளர் முத்துக்குமாரசாமி தற்கொலை செய்தார் என்பதால் இந்த தேர்வு மிகவும் கவனமாக நடத்தப்பட்டது.

தினகரன்

## குற்றாலம் மெயினருவியில் வெள்ளப்பெருக்கு




தென்காசி: குற்றாலத்தில் கடந்த நான்கு நாட்களாக மிதமான சாரல் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த பலத்த மழையால் நேற்று மெயினருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பாதுகாப்பு வளைவைத்தாண்டி தண்ணீர் கொட்டியதால் காலை 6 மணி முதல் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. மாலையில் தண்ணீர் வரத்து சற்று குறைந்ததை தொடர்ந்து 4 மணி முதல் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

**மேட்டூர் அணை நீர்வரத்து சரிந்தது : டெல்டாவுக்கு தண்ணீர் திறப்பு 2,000 கன அடி வீதம் குறைப்பு**



மேட்டூர்: மேட்டூருக்கு நீர்வரத்து 825 கனஅடியாக சரிந்ததால், டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் குறைக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பருவமழை குறைந்ததால் காவிரியில் நீர்வரத்து சரிந்தது. கர்நாடக அணைகளிலும் நீர்மட்டம் குறைந்து விட்டதாக கூறி அம்மாநில அரசு தண்ணீர் தர மறுத்து வருகிறது. கிருஷ்ணராஜ சாகரில் நீர் இருப்பு 28.77 டிஎம்சியாகவும், கபிணியில் 15 டிஎம்சியாகவும் உள்ளது. இரு அணைகளில் இருந்தும் மொத்தம் விநாடிக்கு 5450 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதாக கர்நாடக அரசு தரப்பில் சொல்லப்படுகிறது.

ஆனால், தமிழகத்திற்கு வரும் தண்ணீர் மிக குறைவாகவே உள்ளது. நேற்றுமுன்தினம் விநாடிக்கு 1,313 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை நிலவரப்படி விநாடிக்கு 825 கனஅடியாக சரிந்தது.

அணையிலிருந்து டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு நேற்று முன்தினம் இரவு முதல் விநாடிக்கு 13,800 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. டெல்டா பாசனத்திற்கு மட்டும் விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 75.44 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 74.12 அடியாக சரிந்தது. அணையின் நீர் இருப்பு 36.34 டிஎம்சி.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நடிகர் அக்ஷய் ரூ.90 லட்சம் நிதி**




மும்பை: மகாராஷ்டிரா மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.90 லட்சம் நிதி அளிக்கப்போவதாக அக்ஷய் குமார் அறிவித்துள்ளார். இம்மாநிலத்தின் மராத்வாடா பகுதியில் கடுமையாக வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பலர் தற்கொலை செய்து கொண்டு வரும் நிலையில், பாலிவுட் நடிகர் நானா படேகர் முதல் முறையாக அவர்களுக்கு உதவும் அறிவிப்பை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, அக்ஷய் குமார் தற்போது ரூ.90 லட்சம் நிதி அளித்துள்ளார். தற்கொலை செய்து கொண்ட 180

விவசாயிகளின் குடும்பத்தினரை அழைத்து, அவர்களுக்கு அக்ஷய் குமார் நிதியுதவி அளித்து வருகிறார்.

**காபி தூக்கத்தை பாதிப்பது மட்டுமல்லாமல் ஒழுங்குணர்வை மாற்றிவிகிறது: ஆய்வில் விஞ்ஞானிகள் தகவல்**




வாஷிங்டன்: காபி குடித்தால் தூக்கம் பாதிக்கப்படுமஎன்பது எல்லோருக்கும் தெரிந்து விஷயம் தான் என்றாலும் உடலின் ஒழுங்குணர்வையும் மாற்றிவிடுகிறது என்று பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளனர். காபியில் உள்ள கெஃபெயின் என்ற ரசயாம் உடலில் தூக்கத்தை ஏற்படுத்தும் மெலடோனின் என்ற ஹார்மோன் தயாரிப்பதை தடுத்துகிறது என்று பிரிட்டனின் மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தகவல் தெரிவிக்கின்றனர்.

தூங்குவதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்னர் ஒரு இரட்டை எஸ்ப்ரஸ்ஸோ குடிப்பது உடல் இயற்கையாகவே மெலடோனின் என்ற இந்த ஹார்மோனை உற்பத்தி செய்வதை 40 நிமிடங்கள் வரை தாமதப்படுத்தி விடுவதாக இந்த ஆய்வு மூலம் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மேலும் உடலின் நேர ஒழுங்குணர்வை பாதிப்பை ஏற்படுத்துவதில் கஃபேயினின் பங்கு பற்றி இந்த ஆய்வில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர். தூக்கப்பிரச்சனைகள்

மற்றும் விமானப் பயணக் களைப்பு போன்றவைகளுக்கு சிகிச்சை அளிக்க உதவி செய்யும் என்றும் பிபிசியின் அறிவியல் செய்தியாளர் தகவல்தெரிவித்துள்ளார்

**அடுக்குமாடி குடியிருப்புகளில் சோலார் பேனல்கள் பொருத்த புதிய விதி**




அடுக்குமாடி குடியிருப்புகளில் கண்டிப்பாக சோலார் பேனல்கள் பொருத்த வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா கடந்த 15ம் தேதி சட்டசபையில் அறிவித்தார். இதையடுத்து வீட்டுவசதி மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினர், தமிழக மின்வாரியத்துடன் இணைந்து அதற்கான பணிகளில் ஈடுபட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இன்னும் 3 மாதங்களில் முதற்கட்ட பணிகள் முடிவடைந்து, அதற்கான புதிய விதிமுறைகளை அமல்படுத்த உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து வீட்டுவசதி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: அடுக்குமாடி குடியிருப்புகளில் அமைக்க உள்ள சோலார் பேனல்களின் அளவு, அதற்கு தேவையான இடம் மற்றும் உற்பத்தி செய்வதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதற்கான புதிய விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. தோராய செலவு குறித்தும்

கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது என்றார்.

சோலார் பேனல் அமைக்கும் நிபுணர்கள் கூறியதாவது : உதாரணத்துக்கு, 100 கிலோவாட் சோலார் பேனல் அமைக்கும் பட்சத்தில் தோராயமாக ரூ.70 லட்சம் வரை செலவாகும். சோலார் பேனல்களை பொறுத்தவரை பகல் நேரங்களில் மட்டுமே மின் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், பெரும்பாலானோர் பகல் நேரங்களில் வீடுகளில் இருக்க மாட்டார்கள். எனவே, அவர்கள் பேட்டரி பேக்அப் வசதி வைத்திருந்தால் மட்டும் தான், சோலார் பேனல்களின் உபயோகம் முழுமையாக இருக்கும். இல்லாவிடில் மாலை நேரங்களில் தமிழக மின்வாரியம் மூலம் வினியோகம் செய்யப்படும் மின்சாரத்தை தான் உபயோகிக்க நேரிடும் என்றார்.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**



சென்னை: தமிழகத்தில் கடந்த ஜூன் மாதம் தென் மேற்கு பருவமழை தொடங்கியது. கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, உள்ளிட்ட மாநிலங்களில் எதிர்பாராத அளவுக்கு நல்ல மழை பெய்தது. ஆனால் தமிழகத்தில் கடல் காற்று வீசுவது குறைந்து வெயிலுடன் கூடிய வெப்பம் தகித்து வருகிறது.

இதனால், அடிக்கடி வெப்ப சலனம் ஏற்பட்டு வருகிறது. இதனால் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

சென்னையில் நேற்று மாலை திடீர் சாரல் மழை பெய்தது. குறிப்பாக மயிலாப்பூர், அடையாறு, திருவான்மியூர், தி.நகர், கிண்டி உள்ளிட்ட சில இடங்களில் சாரல் மழை பெய்தது. வெப்ப சலனம் காரணமாக வளி மண்டலத்தில் ஏற்பட்ட காற்று சுழற்சி, தமிழக கடலோரப் பகுதியில் நிலை கொண்டு இருக்கிறது. இதனால் இன்றும் தமிழகத்தில் கடலோரப் பகுதிகள் மற்றும் உள் மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தி இந்து

தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் அதிகரித்துவரும் வெயில்: சென்னையில் கடந்த 5 ஆண்டுகளைவிட அதிகம்



கோப்பு படம்

தமிழகத்தில் அதிகரித்து வரும் வெயிலால் பொது மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

கோடைக் காலம் முடிந்து தென்மேற்கு பருவ மழை காலத்தில் வெயில் குறையும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக தமிழகத்தில் குறிப்பாக சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக வெயில் அதிகரித்து வருகிறது.

இந்த மாதம் தொடக்கத்தில் தமிழகத்தில் சராசரி யாக 33 டிகிரி என்றிருந்த வெயில் படிப்படியாக உயர்ந்து சுமார் 37 டிகிரிவரை எட்டியுள்ளது. சென்னை யில் கடந்த 12-ம் தேதி 34.6 டிகிரி, 13-ம் தேதி 35.1 டிகிரி, 14-ம் தேதி 34.7 டிகிரி, 15-ம் தேதி 36.2 டிகிரி, 16-ம் தேதி 36.9 டிகிரி வெயில் பதிவாகியிருந்தது.

ஆனால் கடந்த ஆண்டுகளில் செப்டம்பர் மாதங் களில் 37 டிகிரியைவிட குறைவாகவே வெயில் பதிவாகி யுள்ளது. 2014-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அதிக பட்சமாக 36.7 டிகிரி பதிவாகியது. 2013-ம் ஆண்டில் 35.7 டிகிரி, 2012-ல் 36.8 டிகிரி, 2011-ல் 36.4 டிகிரி, 2010-ல் 35.1 டிகிரி அதிகபட்சமாக பதிவாகியது.

சென்னையில் மட்டுமல்லாமல் மதுரையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தின் அதிகபட்ச வெயில் 39 டிகிரியாகும். ஆனால் இந்த ஆண்டு 40 டிகிரி வரை வெயில் சுட்டெரித்துள்ளது. அதே போன்று கடலூர், நாகப்பட்டினம் மற்றும் புதுச்சேரியிலும் வெயில் அதிகரித்துள்ளது.

எனினும் அடுத்த 5 நாட்களில் தமிழகத்தில் மழை வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 3 நாட்களுக்கு தமி ழகத்தில் ஆங்காங்கே மழை பெய்யக் கூடும். அடுத்த 2 நாட்களில் பரவலாக பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

# அன்னிய முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை: அருண் ஜெட்லி சிங்கப்பூர் பயணம்



புதுடெல்லி, செப். 18-

மத்திய நிதி மந்திரி அருண் ஜெட்லி, அன்னிய முதலீடுகளை கவர்வதற்காக, தென்கிழக்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாக திகழ்கிற சிங்கப்பூருக்கும், சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹாங்காங்குக்கும் 4 நாள் அரசுமுறை பயணம் மேற்கொள்ள விரும்பினார்.

இந்த பயணத்தின்மூலம் அவர் அன்னிய முதலீடுகளை பெருமளவு கவர்வதை நோக்கமாக கொண்டிருக்கிறார்.தனது பயணத்தின் முதல் கட்டமாக நேற்று இரவு அவர் டெல்லியில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார். இன்றும், நாளையும் அவர் சிங்கப்பூரில் இருப்பார்.‘இந்தியா,

உலகளாவிய சவால் சூழலில் வாய்ப்புகளுக்கான சொர்க்கம்' என்ற தலைப்பில் நடக்கிற சிங்கப்பூர் உச்சி மாநாடு உரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். சிங்கப்பூர் உச்சி மாநாடு, பல்வேறு ஆசிய நாடுகள் பங்கேற்கிற வருடாந்திர முதலீடு மாநாடு ஆகும்.

சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை அருண் ஜெட்லி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். அவர் துணைப்பிரதமரும், நிதி மந்திரியுமான தர்மன் சண்முகரத்னம், வெளியுறவு மந்திரி கே. சண்முகம் ஆகியோரையும் சந்தித்து பேசுகிறார்.சிங்கப்பூரில் முதலீட்டாளர்கள், நிதி மேலாளர்களையும் அவர் சந்தித்து இந்தியாவில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார். சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு அவர் ஹாங்காங் செல்கிறார். இந்த பயணத்தின் மூலம் பெருமளவு முதலீடு ஈர்க்கப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.சிங்கப்பூர் புறப்பட்டு செல்வதற்கு முன்பாக அருண் ஜெட்லி, டெல்லியில் இந்திய பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் நிலுவையில் உள்ள வரி விவகாரங்களுக்கு அடுத்த சில நாட்களில் தீர்வு காணப்பட்டு விடும் என கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், “முதலீடுகள் இல்லாமல் பொருளாதார செயல்பாடுகள் கூடுதலாக நடைபெறாது” என குறிப்பிட்டார்.

## தேனி அருகே சூறாவளி காற்றுக்கு 100 ஏக்கர் வாழை நாசம்



தேனி, செப். 18-

தேனி அருகே சூறைக்காற்று வீசியதில் 100 ஏக்கர் வாழை மரங்கள் சேதமடைந்தன.

தேனி புறநகர் பகுதிகளான வீரபாண்டி, வயல்பட்டி, கொடுவிலார்பட்டி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு சாரல் மழை பெய்தது. அதைத் தொடர்ந்து நள்ளிரவில் திடீர் என சூறைக்காற்று வீசியது. இதனால் வயல்பட்டி, கொடுவிலார்பட்டி ஆகிய பகுதிகளில் 100 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் சாய்ந்து விழுந்தன. இது குறித்து வயல்பட்டி வாழை விவசாயிகள் கூறியதாவது:-

வாழை வரத்து 8 மாதங்களுக்கு முன்பு அதிகரித்து விலை குறைந்தது. சில வாரங்களாக காஞ்சாரை நோய் தாக்கி விளைச்சல் பாதிக்கப்பட்டது. தற்போது இயற்கை சீற்றத்தால் அறுவடைக்குத் தயாராக இருந்த பல லட்சம் ரூபாய் மதிப்பிலான வாழை மரங்கள் சேதமடைந்தன.

ஒரு ஆண்டுகளாக வாழை விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு வகையில்

பாதிக்கப்பட்டு வருகின்றனர். சேதமடைந்த வாழை தோட்டங்களுக்கு தமிழக அரசு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றார்.